# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | பி.வா.சா.1 |
|---|---|---|---|
| பெயர் | மாரியப்பன் | நாள் | 29.08.2024 |
| தகப்பனார் பெயர் | ஆறுமுகம் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

11) நான் என் முன் விற்பனையாளரிடமிருந்து எத்தனை சதுரடி நிலத்தை கிரயம் பெற்றுள்ளேன் என்றால், 6–3/4 சென்டும், 2.90 சென்டும் கிரயம் வாங்கியுள்ளேன். எந்த வருடத்தில் கிரயம் பெற்றேன் என்றால், 01.01.2009 ம் தேதியல் வாங்கினேன். இவ்வழக்கில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டுள்ளாரா என்றால், பார்வையிட்டுள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் நான் கிரயம் பெற்ற நிலத்தையும் தாண்டி வாதிக்கு பாத்தியப்பட்ட ச.எண்.848 ல் 14–3/4 சென்ட் நிலத்தை நான் ஆக்கிரமித்துள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் கூறியுள்ளார் என்றால், அவ்வாறு சொல்லவில்லை.

12) நான் கிரயம் பெற்ற நிலத்தை தாண்டி வாதிக்கு பாத்தியப்பட்ட நிலங்களில் ஆட்களுடன் அத்துமீறி நுழைந்து அவருக்கு தொல்லை கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி பிரச்சனை தொடர்பாக வாதிகள் என் மீது காவல் நிலையத்தில் புகார் அளித்தனரா என்றால், அளித்தனர். போலீசார் விசாரித்து பார்த்து மேற்படி புகாரில் உண்மையில்லை என்று கூறிவிட்டனர். போலீசார் என்னை மேற்படி புகாரின் பேரில் எச்சரித்தனர் என்றால், சரியல்ல. அவ்வாறு அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

13) என் முன் விற்பனையாளரே பிரதிவாதிகள் நிலத்திலிருந்து 100 அடி தூரம் தள்ளிதான் எனக்கு நிலத்தை விற்றதாக கூறியுள்ளார் என்றால், எங்களுக்கு கடைசி நிலமாக உள்ளதால், அவர் அவ்வாறு கூறியுள்ளார். வா.சா.ஆ.7 கிரய ஆவணப்படி தவறாக இரண்டு சக்குபந்தி விவரங்களில் கிழக்குபுறம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. என் பெயரிலுள்ள கிரய ஆவணத்தில் மேற்குபுற சக்குபந்தி விவரம்

குறிப்பிடாததால் மேற்படி சக்குபந்தி விவரமே தவறானது என்றால், சரியல்ல.

14) எனக்கு பாத்தியப்பட்ட நிலம் போக வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 14–3/4 சென்ட் நிலத்தை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றால், சரியல்ல. குப்புசாமி கவுண்டர் நிலத்திற்கும் மேற்கு, கோம்பை செல்லும் பாதைக்கு கிழக்கு மற்றும் தெற்கு, சண்முகம் நிலத்திற்கும் வடக்கு இதன் மத்தியிலுள்ள 2.50 ஏக்கர் நிலத்திற்கும், எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால், சரிதான். ஆனால், வாதிகளது கிரய பத்திரத்தில் கண்டுள்ள அளவுப்படி அவர்களுக்கு நிலம் இல்லை. வாதிகளுக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியாது. வாதிகள் தங்களுக்கு குறைவாக உள்ள நிலத்தை ஈடு செய்ய என்னுடைய அனுபவத்திலுள்ள நிலத்தில் உரிமைகோருகிறார்கள்.

15) நான் சொல்வது தவறானது என்றாலும், வாதிகளின் தந்தை 2.50 ஏக்கர் நிலத்தை 1980 ம் வருடத்திலேயே கிரயம் பெற்றுள்ள நிலையில், நான் என் நிலத்தை 2009 ம் வருடத்தில் கிரயம் பெற்றுவிட்டு, வாதிகள் நிலம் குறைவாக உள்ளது என சொல்வது தவறானது என்றால், சரியல்ல. வாதிகளின் தந்தை கடந்த 1980 ம் வருடத்திலேயே கிரயம் பெற்று வாதிகளால் அனுபவித்து வரும் நிலத்தில் 14–3/4 சென்ட் நிலத்தை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றால், சரியல்ல. அரசாங்கத்தால், ச.எண்.848/1ல் எனக்கு ஒதுக்கப்பட்ட மேற்படி 6–3/4 சென்ட் மற்றும் 2.90 சென்ட் நிலத்தில் மட்டும் தான் நான் அனுபவத்தில் உள்ளேன்.

16) அரசாங்கத்தால் எனக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லும் மேற்படி நிலத்தில்தான் தற்போது நான் வசிக்கிறேனா என்றால், ஆமாம். அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட நிலம் எனும் நிலையில் அதற்கான ஆதாரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட நிலம் என்பது நீதிமன்ற தீர்ப்பாணையின்படி வந்ததால் அவ்வாறு கூறுகிறேன். நீதிமன்ற தீர்ப்பாணையின்படி மேற்படி 0.31 சென்ட் நிலம் ஏழு குடும்பங்களுக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லும் நிலையில், அவ்வாறு நீதிமன்ற

தீர்ப்பாணை எதையேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், வருவாய் துறை அலுவலகத்தில் மேற்படி நீதிமன்ற தீர்ப்பாணை குறித்து எங்களிடம் கூறினார்கள்.

17) வாதிகளின் நிலம் கிரய பத்திரத்தில் உள்ளதை விட குறைவாக உள்ளது என எதனடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு, அளந்தபோதும் அதற்கு முன்பே வருவாய் துறை அதிகாரிகள் தாவா சொத்தை அளந்தபோதும், வாதிகளின் நிலம் குறைவாக உள்ளதாகவும், தெரிவித்ததன் அடிப்படையில் எனக்கு தெரியவந்தது. நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்து இதுவரை அளக்கப்படவில்லை என்றாலும், சரியல்ல. இதுவரை சுமார் 10 முறைக்குமேல் அளந்துள்ளனர்.

18) நாங்கள் கிரயம் பெற்ற 6-3/4 செண்ட் நிலத்தையும், 2.90 செண்ட் நிலத்தையும் அளந்து பார்த்துள்ளேனா என்றால், அளந்து பார்த்துள்ளேன். அளவுகள் சரியாக உள்ளது. நான் சொல்வது தவறானது என்றாலும், இதுவரை என் நிலத்தை நான் அளக்கவில்லை என்றாலும், அவ்வாறு அளந்திருந்தால் அதற்கான ஆதாரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.